எழுத்து

செப்டம்பர்

64

ஆறாம் ஆண்டு

ஆசிரியர் :

சி. சு. செல்லப்பா

அறுபது நிரம்பும் ராமையா 138
தலையங்கம்

கவித்வம் 139
தர்முசிவராமு

நிலவு 140
சு. சங்கரசுப்ரமண்யன்

பரிசு பெற்ற ஓவியம் 141
ந. பிச்சமூர்த்தி

வலை 145
தர்முசிவராமு

பழமை திரும்பிவருமா? 146
வ. ரா.

இடமாற்றம் 148
தி. சோ. வேணுகோபாலன்

உங்கள் காதுக்கு 150
சு. ச.

ஐந்து கவிதைகள் 151
சி. மணி

50

பைசா

69

6-ம் ஆண்டு
ஏடு 69
செப்டம்பர்
1964

எழுத்து

ஆசிரியர் :
சி. சு. செல்லப்பா

'எழுத்து' ஒவ்வொரு இங்கிலீஷ் மாத முதல் தேதியன்று வெளிவரும் மாத ஏடு.தனிப் பிரதி காசு 50. ஒரு ஆண்டு சந்தா ரூ. 5-00 வெளிநாடுகளுக்கு ரூ. 6-00 சந்தா, கட்டுரை சம்பந்தமான கடிதங்கள் எல்லாம் 'எழுத்து' (Ezhutthu) 19-A, பிள்ளையார் கோயில்தெரு, திருவல்லிக்கேணி, என்ற முகவரிக்கு அனுப் பப்படவேண்டும்.

தலையங்கம்

அறுபது நிரம்பும் ராமையா

தமிழ் சிறுகதைக்கு பிதா என்று வ. வெ. சு. அய்யருக்கு இடம் அளித்திருக்கிறோம் நாம். அவரைதாண்டி, சுமார் பத்து வருஷகாலத்துக்குப் பிறகு வந்து விட்டோமானால் சிறுகதைத் துறையில் அடுத்த இடம் பெறும்படியான ஒரு பெரிய சாதனையை செய்து காட்டியவர் வத்தலக்குண்டு பி. எஸ். ராமையா. ஒன்றிரு தனிமனித முயற்சியாக, இலக்கியத்தரமான சிறுகதை கையாளப் பட்டு வந்த ஒரு கட்டத்திலிருந்து ஒரு கோஷ்டியாக சிறுகதை வளம் பெருக்க ஊக்கம் ஏற்பட்ட ஒரு கட்டத்துக்கு வழி செய்து, அந்த கோஷ்டிக்கும் தலைமை வகித்து அந்த கட்டத்தையும் நிலைநிறுத்திய ஒரு தனிப் பெருமைக்கு உரியவர் பி. எஸ். ராமையா. இலக்கியத் துறையில் புது முயற்சிகளுக்கும் புது வழி சிந்தனைக்கும் வழி காட்டி வகைசெய்த வ. ரா. வோடு 'மணிக்கொடி' யில் கூட இருந்து, வ. ரா. மணிக்கொடி நின்றதும் மணிக்கொடி. மறையக்கூடாதென்ற உறுதியுடன், சிறுகதைத்துறையில் வளம் பெருக்கும் அவசியத்தை உணர்ந்து, சிறுகதை உருவ அமைப்பின் தனித்தன்மையை தனக்குள்ளே உணர்ந்து, சிறுகதை 'மணிக்கொடி' ஆரம்பித்து மணிக்கொடியில் எழுதியவர்களில் அந்ததுறையில் திறமைக்கு அறிகுறி-காட்டியவர்களை வசப்படுத்தி மணிக்கொடி சிறுகதை கோஷ்டி என்று ஒன்று உருவாக காரணமாக இருந்தவர் ராமையா.

தமிழில் தலை சிறந்த சிறுகதைக் காரர்கள் என்று ஒருபத்துப்பேரை.அல்லது ஒரு டஜனை, அல்லது ஒரு இருபது பேர்களை (தன்மூப்பாகஎண்ணிக்கையை வரையறை செய்து கொள்வது அவரவர் இஷ்டம்தானே) பொறுக்கியோ அல்லது சிறந்த சிறுகதைகள் என்று ஒருபத்து,பன்னிரெண்டு,இருபது,இருபத்தைந்து என்று தேர்ந்தெடுத்தோ அவரவர் ரசனை,விருப்பம்,மதிப்பீடுஇவைகளுக்குஏற்ப பட்டியல் முன்வைக்க உரிமை யாருக்கும் உண்டு. உருவ அமைதிக்குஇடம்கொடுத்து பொறுக்கலாம் சிலர், உள்ளடக்கத்துக்கு முக்யத்வம் கொடுத்து தேர்ந்தெடுக்கலாம் வேறுசிலர், ஆனால் இந்த இரண்டு குணங்களும் சேர்ந்து அமைந்த சிறுகதைகள் தான் குறிப்பிடத்தக்கவை. ராமையாவின் சிறுகதைகள் இந்த இரண்டு அம்சங்களையும் சிறப்பாக சேர்மானமாகக்கொண்டவை. உருவஅமைதி உத்திகளைப் பொறுத்து ஆசிரியரின் திறனுக்கேற்ப ஏற்படுவது என்றால் ராமையாவின் சிறுகதைகள் இந்த குணங்கள் சிறந்து அமையப்பெற்றவை. 'மலரும் மணமும்' கதையுடன் ஆரம்பித்து நக்ஷத்திரக்குழந்தைகள் பூச்சூட்டல்,வார்ப்படம் எதிர்க்கட்சி, தொண்டர்நாதன் தூது, 'குஞ்சிதபரதம்' 'கஞ்சிக்கலயம்' 'கார்னிவல்' பணம் பிழைத்தது ஆகியவை போன்ற சிறுகதைகளை படைத்த ஒரு கை தன் திறனுக்கேற்ப உத்திகளை கையாண்டு உருவ அமைதி கொடுத்த கை என்பதை பண்பட்டுள்ள ரசிகமனம் உணரத்தவறாது.பத்துப் பெயர்கள் வேண்டாம், ஐந்து கூட வேண்டாம், மூன்று பெயர்களை தமிழ் சிறுகதை பற்றி குறிப்பிடுவதானால் கூட, ராமையாவின் பெயரை குறிப்பிட தவறும், மதிப்பிட இயலாத ஒரு விமர்சகப்பேனா, ஒரு செக்காவையோ, ஒரு மொப்பாசானையோ ஓ ஹென்றியையோ உலக சிறுகதை இலக்கியத் துறையில் குறிப்பிடத் தவறிய ஒரு மையில்லாத பேனா என்றுதான் சொல்ல வேண்டும். ராமையா தமிழ்ச் சிறுகதைக்கு தனிச் சிறப்பாக தன் பங்கு காணிக்கையை செலுத்தியவர் அதோடு இன்னொரு தனிச்சிறப்பாக 'ராமையாவின் சிறுகதை மணிக்கொடி' மூலம் தமிழ் சிறுகதை அதுக்கு வித்திட்ட அய்யருக்குப்பின் உரமும் வளமும் பெற்று 'சிறுகதை இலக்கியம் என்ற பேசும்படியாக வைத்த ஒரு காலகட்டத்து இயக்கத் தலைவன் என்றும் சொல்லத்தக்க ஒரு இடம்பெற்றவர்.

அந்த பி. எஸ். ராமையாவுக்கு குளத்தங்கரை அரசமரம் கதைக்குப்பின் அதாவது 1930 க்களின் ஆரம்பத்தில்எவராலும்பேசப்பட்ட 'மலரும் மணமும்' படைப்பாளிக்கு வருகிற ஆண்டு ஆரம்பத்தில்-1965 மார்ச் மாதத்தில் அறுபது வயது நிரம்புகிறது. அந்த அறுபது ஆண்டு நிறைவை தமிழகம் கொண்டாடி ஒரு முதிர்ந்த கலைஞனை, சிறுகதை மட்டும் இல்லாமல், நாடகம், சினிமா துறையிலும் ஈடுபட்டுபடைப்பு செய்யும் ஒருநல்ல அனுபவக்காரரை கவுரவிக்க வேண்டும் என்று எடுத்துச் சொல்லவே இந்த தலையங்கம் எழுதப் பட்டிருக்கிறது, ஒரு ஆறுமாத காலம் நம்முன் இருக்கிறது. அவசர அதிரடியாக ஏதோ நடந்தது என்று போய் விடாமல், திட்டமிட்டு, அந்த வாய்ப்பை பயன் படுத்தி ஒரு இலக்கிய விழாவாக முக்கியத்வமும் அர்த்தமும் உள்ளதாக நடத்த வேண்டும் என்ற கருத்து பல இடங்களிலிருந்து நமக்கு தெரிவிக்கப்பட்டிருக்கிறது. எழுத்து வாசகர்கள் முன் இந்த யோசனை வைப்பதுடன் ஆரம்பித்து இந்த விழாவுக்கு திட்ட மிடுவதான வழி வகைகளை ஆராயும் செயலுக்கு ஒரு ஆரம்பம் செய்து வைக்கிறோம். சென்னை நகரத்தில் இந்த விழா நடைபெற ஏற்பாடுகள் செய்யப்படும் அதே போல ராமையாவின் பிறந்த ஊரான வத்தலக்குண்டு கிராமத்திலும் ஒன்று நடத்த உத்தேசம், இந்த இரண்டுக்குமாக தமிழ்நாட்டு, கலை, இலக்கிய ரசிகர்கள் அடங்கிய ஒரு விழாக்கமிட்டி அமைக்க ஏற்பாடுகள் செய்யப்பட்டு வருகின்றன. அங்கங்கே உள்ள எழுத்து வாசகர்கள் இதில் தங்கள் பங்கை செலுத்தும் படி கேட்டுக்கொள்கிறோம். மேல் விவரங்கள் அடுத்த ஏட்டில் வெளியிட முடியும் என்று நம்புகிறோம்.

கவித்வம்

தர்மு சிவராமு

கவிதையின் ஊற்றுக்கண் ஆசையல்ல. கற்பனை அல்ல. கவி என்பவன் தனது சுயவியாபகத்துக்காக உற்பத்தியாக்கும் சரக்கு அல்ல. கவிதை உண்மையில் நடைமுறை. வாழ்வில் சம்பவிப்பது. இக்கவித்துவத்தை கவிஞனாக இயங்கும் மனிதனில் உணர்ந்து கொள்ளவேண்டும். கவிதைக்கு அப்போதுதான் உரிய நியாயம் கிடைக்கும்.

இளம் கவிஞர்கள் வியாபகத்தில் ஆசை கொண்டு கற்பனையை உற்பத்திச் சாலையாக மாற்ற முயல்வதுண்டு. இதனால் தங்களது வாழ்க்கையையே அவர்கள் செயற்கைப்படுத்திவிடக் கூடும். அதாவது, உற்பத்திச் சாலைக்கு ஊட்டம் தரும் கரிச் சுரங்கமாக வாழ்க்கையை, அனுபவ உலகைக்காண முற்படக்கூடும். 'கவிதைக் கண்' என்கிற போலி கலர் கண்ணாடியை மாட்டிக் கொள்ளலாம். இது கவிஞனுக்கும் மனிதனுக்குமுள்ள தொடர்பை உணராததின் விளைவு.

வியாபாரார்த்தமான மனிதனாகதான் வாழ்கிற போது 'கவிஞன்' அனுபவத்தை கவிக் கண்ணூடே காணமுயல்வதுதான் கவிதைக்கு ஊட்டம் தருவ்து என்பது தவறு. வாசகனும் கவிஞனைப்பற்றி அனுபவம் இவ்வகையில் ஏதும் விசித்திரமாக கவியுள்ளத்திற்கு தென்பட, மனப்பதிவு கொள்ளக்கூடும் என்று ஏமாறுவதுண்டு.

சாமானிய வாழ்க்கையில் ஒருவன் பூரணமாக வாழ்கிறபோது அங்கேயே கவிதை நடைபெறுகிறது. பூரண மனித வாழ்வே கவிதை வாழ்வு. 'உந்நத' மனித நிலைஅள்ள' பூரண நிலை. அங்கு ஒருவித கோணல் பார்வை இருந்தாக வேண்டும் என்பதோ, வார்த்தைகள், மனப்படிமங்கள் மூலம் அனுபவம் சுயாதீனமாகக் கிரகிக்கப் பட வேண்டும் என்பதோ அல்ல. சுயாதீனமாக மனம் அனுபவத்தை படிமங்களில் படம் எடுத்து உரிய வேளையில் கவிதை வடிப்பதுதான் கவிதை வாழ்வு என்றால், வாழும் கணத்தில், அனுபவத்தை படிமமாக்கும் தொழிலே மிஞ்சும். அனுபவத்தின் முழு ஆழமும் தென்படாது, இதுதான் பொதுவாக போலிக் கவிகளுக்கு நேர்வது.

இதனால் கவியின் மனித வாழ்வில் கவித்துவம் இராது. ஒரு ஆசையின் தொழிலே நிகழும். அனுபவத்தை மனசில் பதிக்க முயல்கிறபோது மனம் எவ்விதத்தில் தொழில்படுகிறது என்று கண்டால் அங்கு உள்ள ஆழமின்மை தென்படும். ஆசையின் தொழில் எதுவரை என்பது தெளிவாகும்.

போலிக் கவியிடத்தில் ஆசையென்பது கவிதைப் படைப்பை உத்தேசித்திருப்பதால் அவன் அனுபவத்தை உன்னதமாகக் 'காண' முயல்கிறான். இதனால் அனுபவத்தின் உண்மையைக் காண முடியாதது மட்டுமல்ல, மறுக்கவும் செய்கிறான். அனுபவம் நேரும்போதே அதைப் படிமங்களாலும் உவமையணிகள் போன்றவற்றாலும் சேகரிக்க முயல்கிற தொழில்தான் இதனால் மிச்சமாகும். இதன் விளைவு? அநுபவம் ஒரு தொழிலாகி விட்டது தொழிலில் இன்பமுண்டா? அநுபவமே அல்லவா இன்பம்? அநுபவத்தின் இன்பம் அது ஊட்ட வரும் மெய்யான மனப்பதிவு இழக்கப் பட்டுவிட்டது. அநுபவ வேளையில் மனத்தொழில் இருந்ததால் தொழிலும் அநுபவமும் ஒன்றையொன்று முட்டிய படபடப்பே மிஞ்சுகிறது. இது கவிதை வாழ்வாகுமா? இதன் விளைவாகப் பிறப்பதுதானா கவிதை? பெரும்பாலான போலிக் கவிதைகளின் வரலாறு இதுதான்.

ஆவிவாழ்வோ. பூரணவாழ்வு. அவ்வாழ்வில் கவிஎழுதப்படாவிட்டாலும் கவித்துவம் உண்டு. உண்மையின் பொலிவுண்டு. பூரண வாழ்வு என்பதை உந்நதத் தன்மையுடன் குழப்பிக் கொள்ள வேண்டாம். முதன்மையாக, நாம் உந்நதமான வாழ்வு என்று கருதுவது எதிலுமே உந்நதத் தன்மை இல்லை, ஏனென்றால் நாம் நியதிக்குக் கட்டுப்படலே உந்நதம் என்கிறோம். நியதிக்குக் கட்டுபட்டால் விடுதலை இல்லை. இன்பமில்லை பயமே செய்கையை ஆள்கிறது.

மனம் நியதியை ஏற்றுக்கொள்கிற ஒரு வகையைத்தான் கவிவாழ்வு வாழ 'முயல்கிற' மனப்பான்மை எனச் சற்று முன்பு விஸ்தரித்தோம், படிமங்கள், சொற்கள் என்பவற்றின் 'கவித்துவ நியதி'யுள் வாழ்வை, அநுபவ உலகைச் சிறைப்படுத்திய நிலை அது. அங்கு விடுதலை இல்லை.

பிறர் வெவ்வேறு விதங்களில் வெவ்வேறு வகை நியதிகளில் சிறைப்பட்டு கண்களுக்குப் பட்டை கட்டிக் கொண்டுள்ளார்கள். மதங்களும், புதுப்புது 'இஸம்' களும் உண்டாக்கிய நியதிகள்! சிறைச் சுவர்களை நீலமாகப் பெயின்ட் அடித்து வான வெளியாகக் கற்பனை காட்டினதில் கவரப்பட்டவர்கள் பலர், வயிற்றுச் சுவருள் முடங்குபவர்கள்!

ஆனால் எல்லாவித நியதிகளையும் தகர்த்து நிற்கும் சக்தி மனிதனிடத்தில் உண்டு. தேசிய, இன, மத வாழ்வுகளுக்கு அப்பாற்பட்ட குழந்தைமையுடன் மனம் விழிப்புப்பெறும் கணமே அது. 'இன்னொஸன்ஸ்' என்கிறோமே, மனப்பதிவுகளின் உத்வியை உதறிவிட்டு விழிக்கும் குழந்தைமை? அதைக் குறிப்பிடுகிறேன். கவிஞன்

அவ்வப்போது அறிந்தோ அறியாமலோ இந் நிலையை அடைந்து விடுகிறான். அவ்வகைக் கணங் களிலேயே வாழ்வின் எல்லையின்மை, சொல்லுக்கு இணங்காத பூரணம் புலப்படுகிறது. இக்கணங் களை நாம் 'அநுபவ வேளை' என்று கொள்ளலாம்.

ஒரு மலரிதழில், திமிரோடு மௌனமாக நிற்கும் பாறைத் தூணில், வண்ணப் படபடப் பாக விழும் பகல் எல்லையில், பக்குவமான மனித உள்ளம் தனது சேகரிக்கப்பட்ட மனப் பதிவுகளை, சேகரிப்பின் விளைவான தன்மயத்தை இழந்து விடுகிறது. குழந்தையிலிருந்து மனிதன் வரை தனக்கு அந்நியமானவற்றிலிருந்து கிர கித்த அநுபவங்களின் திரட்சியே, ஞாபகச் சேர்க் கையே இந்த 'நான்', அது புலனனுபவத்தை, வெறும் மிருகத் தன்மையைத் தூண்டாத அழ கில், வாழ்வில் ஒரு உண்மையை அறிந்த அதிர்ச்சி யில் பிறக்கும் எல்லையற்ற ஒரு சக்தியில், அணை கிறது. அந்த சக்தி இடையறாது உழலும் மனசின் தன்மய ஊசலான எண்ணத் தொடரை அறுத்து நிறுத்தி விடுகிறது. இதுவே கவியநுபவம்.

எனவே கவியனுபவம் ஸப்ஜெக்டிவ் ஆனது. தன்னுணர்வுமயமானது. தன்னுணர்வை பூரண சக்தியை புலன்வாழ்வுக்கு அப்பாலான உள்ளழ கைப் புலப்படுத்தக் கூடியதே, எழுப்பக்கூடியதே கவிதா உள்ளம். இவ்வுள்ளத்துக்கு புலன்கள் உழலும் காட்டுமிராண்டிகளல்ல. பக்குவமான சம்மனசுகள். இவ்வுள்ளம் புலன்வாழ்வையும் நியதிகளுக்குள் சிறைப்படுத்திக் காணுததாலேயே காமம் என்று நியதிவசப்பட்டவன் ஒதுக்குவ திலும் குழந்தைமையுடன் ஈடுபட்டு அகண்டப் பொருளின் சாயையைக் காண்கிறது.

இவ்வனுபவங்கள் இனி கவிதையாக வெளிப் படும் ரகசியம் என்ன?

சொற்களில் பழகிய, சொல்மயமான நினை வுத் தொடரில் அனுபவ மின்சாரம் பாயும் வேளையே கவிதை பிறக்கும் வேளை. வாழ்வை அநுபவிக்கும் போதே அதைச் சொற்களாகப் பதித்துக் கொள்வதுடன் இந்நிலையை ஒப்பிட்டுப் பார்த்தால் இதன் ரகசியம் புலனுகும். இங்கு சொற்களில் அநுபவம் சிறைப்படவில்லை. சொற் களில் அநுபவம் தீயாகப் படர்கிறது. கவிதை சொல்லில் இல்லை. சொல்லோட்டம் வெறும் வாய்க்கால் கீறு. கவிதையின் ஊற்று சொல்மய மான மன ஊசல்கள் கட்டுண்டு நின்ற கணத் தில் போனதும் வருவதும் அற்ற நிகழ்களத்தில் கிடக்கிறது. ஒரு கவிதையிலும் முழுசாகஇதுதென் படாமல் ஒரு படிமத்தில் தெறிப்பது இந்த நிகழ் கணத்து அநுபவங்கள் உள் மனசில் கிடந்து, வெளி மனசில் ஓடும் சொற்களுடன் திடீர் உறவு கொள்வதால்தான். எனவேதான் கவிதை சுயா தீன இச்சையை மீறியது. கவிதையின் பிறப்பு உள்மனசில் கவியனுபவங்கள் கிடந்து, வெளி மனசுச் சொல்லோட்டத்துள் ஊற்றுத் திறப்பதில் நேர்வது.

ஆனல் நாம் படைப்புத் துறையை உயிரூட்ட முயல்கிறோம்—விமர்சனத்தைக் கொண்டு. இவை 'தன்' கால, இன. மொழியுடன் தன்னை அடை யாளம் கண்டு பிறந்த ஒப்பீட்டு மனப்பான் மையின் விளைவு. இதனல் விழிப்பு உள்ளவனும் கவிதையின் இயக்க இயல்பை மறந்து தன்னி இன கொழிகளுக்கு வெறிகளுக்கு—இந்த வெறியின் டிகிரி வித்தியாசப்படலாம். ஆனல் வெறி வெறி தான்—அநுபவத்தின் ஆழத்தையே இழக்கிறான். பிரச்சார இலக்கியகாரனின் இங்சையும் இக் கதியே தருகிறது.

கவிதை வெளிமனசின் சுயாதீனத்துக்கு உடன் படுவதல்ல. ஏனெனில் வாழும்போதே சுயாதீன சக்தியான நினைவுத் தொடர், மன ஊவு அணந்த வேளையில், ஒரு இச்சை இலக்கு அற்ற கணமாக நேர்வதே கவித்துவ வாழ்வு. இச் சைக்கும் நியதிக்கும் தளைப்படாத அந்த அநுபவ வேளைகள் சமூக, காலத் தேவைகளுக்கும் பிற இச்சைகளுக்கும் உடன்படும் என்பது முரணுகும்.

அக் கணங்கள் கவிதையை உத்தேசித்து அமைக்கப்பட்டதல்ல' உத்தேசமே ஒரு இச்சை யல்லவா. கவித்வம் வாழ்வின் மகத்துவத்துக்கு தனிமனித, புலனியக்க சுயத்தன்மைகளை இழந்து, பக்குவப்பட்ட ஒரு வாழ்க்கை முறை. வாழ்வின் உண்மை பொய்களை அறிந்து முதிர்ந்த மனசின் இயல்பான வழி. அதை உத்தேசிக்க முடியாது —உத்தேசங்களை இழப்பதே அவ்வாழ்வாயிருப்ப தால்.

வெளியீடு அடையாவிட்டாலும் அது கவிதா வாழ்வு. வெளியீடு பெறுவது உலகின் அதிர்ஷ் டம். வெளியீடு பெற்றுல் கவிதை அவ்வாழ்வின் விளைவு. எனவேதான் கவிதை உத்தேசமல்ல. 'படைப்பு' என்பதே 'விளைவு' என்கிறதை உள் ளுணர்த்தவில்லையா? பின் ஏன் நாம் சுயாதீன முயற்சிகளை பலப்படுத்துகிறோம்? வாழ்வை மறந்து கவிதையை குதிரைக்கு முந்தின வண்டி யாக மாட்டுகிறோம்?

நிலவு

அவளோ
சினிமாக்காரி.
உருவம் காட்டி
ஊரை மயக்க
ஒளி பாய்ச்சி
குளோசப்பில்
நிறுத்துகிறார் யாரோ.
அப்படியே
இருந்து விட்டாலோ
முகப்பருவும்
மேக்கப்பை
மீறி விடும்.
எனவே தான்
ஒளி குறைத்து
நிழல் பூசி
ஒளிக்கின்றார்.
காமிரா வேலைக்கு
காரிகையா பொறுப்பு?

—சு. சங்கரசுப்ரமண்யன்

பரிசு பெற்ற ஓவியம்

ந. பிச்சமூர்த்தி

'உண்மையாக இது வெகு வெகு அழகாக இருக்கிறது.'

'இதுவரையில் பார்த்ததெல்லாம் விடவா?'
'அதெல்லாம் சாணிப் புழு, இது மின்னல்
'அப்படியா? அவ்வளவு அற்புதமா?'

'மந்திரவாதி காற்றிலே கையைத்துளாவி பெயர் தெரியாத புதிய பொருளைப் பிடித்து முன் னிறுத்தியது போன்ற புதுமையும் வசீகரமும் மர் மமும் இதில் இருக்கிறது! 'நானும்தான் பார்த்துக் கொண்டிருக்கிறேன். புரியவில்லை. இதற்கு என்ன' பொருள்? இது என்ன சொல்லுகிறது? ஓவியர் ஒரு தலைப்பாவது கொடுத்திருக்கக் கூடாது?'

'நீ பல விஷயங்களை அடுக்கிக் கேட்டு விட் டாய், முதலாவதாக பொருள் ஒன்று இருக்க வேண்டுமா? சிருஷ்டி—எந்த சிருஷ்டி ஆனாலும்— அதன் தோற்றமே அதன் அழகு, அதன் நியாயம், அதன் உண்மை. பொருள் இருந்தாலும் இருக்க லாம் இல்லாவிட்டால் தண்டனை கிடையாது. அவ்வளவுதான். உலகம் என்ற சிருஷ்டிக்குப் பொருள் இதுவரை யார் சொல்லி இருக்கிறார்கள்? பிகாசோ கேட்பது போல் குயில் கத்துவதற்கு என்ன பொருள்?'

'ஏன் இல்லை. அது பாலுணர்ச்சியின் முக்ய சமிக்ஞை இங்கே இருக்கின்றேன் என்று பேடைக்கு வற்புறுத்தி விந்நியா சத்துடன் கூறும் உறுதி மொழி. அப்படிக் கில்லாத பொழுது உயிர் பொங்கி வழிவதன் ஆனந்த கீதம். தன் மயானந் தம்.'

'ஒரு தலைப்பு இருந்தாலாவது இவ்வளவு திகைப்பு உண்டாகாது'

'சிருஷ்டிக்குத் தலைப்பு தேவை இல்லை என்று தான் சொல்லுகிறேனே. என்னைக் கேட்டால் கூடாதென்பதே என் கட்சி. யானை என்று பெயர் ஒட்டிஇருந்தால், நிஜயானை இல்லை என்பது தானே உண்மையாக இருக்க முடியும்? அதனால் தானே சர்க்கஸில் கோமாளிஜால் போர்த்தி யானை என்று தலைப்பிட்டு ஓட்டி வரும் யானையைக்கண்டு ஜனங்கள் கை கொட்டி சிரிக்கிறார்கள். நாம மில் லாதிருப்பதுதான் உண்மையாகும். இருந்து விட் டால் முளையில் அடித்த மாடு மாதிரி தும்பைத் தெறித்துக்கொண்டு ஓடப்பார்க்கும், அல் லது முளையை சுற்றிச் சுற்றி வந்து கழுத்துஇறுகி மூச்சு முட்டி விழும் கட்டம் வந்து விடும்.' 'இருக் கட்டும். இந்த ஓவியம் என்னதான் சொல்லுகி றது? எது வேனும் சொல்லுகிறதா?'

'ஒன்றுமே புரியவில்லையா? மழைக்காலப் பேயி ருட்டு. அது பெரும் பாதை. பாறைமேலே மரம் முறிந்து ஹோ என்று விழுந்திருக்கிறது. சுடுகாட் டில் பெரிய எலும்புகள் இறைந்து கிடப்பதைப் போன்ற தோற்றத்தை ஓவியர் எப்படி உண் டாக்கி விட்டார்! இது வாழ்வின் குறியீடு என்று கூறும் பின்தொனி ஒன்று கேட்கவில்லையா? அதே பாதையில் போவது போன்ற நிழலுருவம் தெரி கிறதே—அதுதான் இந்த தொனியை உண்டாக் குகிறது.'

'அப்படியா? அப்படியும் இருக்கலாம். ஆனல் எனக்கு மாத்திரம் ஒரு சந்தேகம் நிச்சயமாக ஏற் பட்டு விட்டது, இந்தப் படத்தைத்தலைகீழ் மாட்டி விட்டார்கள் என்றே எனக்கு ஆரம்பம் முதல் தோன்றி வருகிறது. இதற்காகவேனும் ஓவி யங்களுக்குத் தலைப்பு அவசியம் என்று தோன்று கிறது. 'தலை கீழாக மாட்டிவிட்டார்களா? கண் காட்சிப் படங்களைக் கையால் எடுத்து பார்த்தால் சண்டைக்கு வந்து விடுவார்கள். கண்காட்சிக் காரர்கள் சட்டம். அது இல்லாவிட்டால் கையில் எடுத்தே திருப்பிப் பார்த்துவிடலாம்...இருந்தா லும் பொறு பொறு.'

இப்படிக் கூறியவர் தலையை ஒரு புறமாகச் சாய்த்துக்கொண்டு, படத்தை மாற்றி மாட்டி இருந்தால் ஓவியம் எப்படித் தெரியும் என்பதை ஆராய்ந்து பார்த்துக் கொண்டிருந்தார்-மூன்று நிமிடகாலம்.

'சபாஷ்! அப்படியும் இருக்கலாம் என்றுதான் தோன்றுகிறது. நீ சொன்னதில் பெரிய உண்மை தொக்கிநிற்கிறது.தெரிந்து சொன்னாலும் தெரியா மல் சொன்னாலும் உண்மை உண்மைதான். ஒப் புக்கொள்ளத்தான் வேண்டும்.'

'அப்பொழுதும் ஓவியம் இதையேதான் சொல்லுமா? 'அப்பொழுது இதைச் சொல்லாது. இலைகளே இல்லாத தோலுறிந்த பெரிய மரத்தின் கிளைகள் ரா இருட்டில் வெண்மையாகத் தெரிகின் றன; மரத்திலிருந்து இடது புறத்தில் ராட்சஸ சிலந்திக்கூடு, அதற்கப்பால் மங்கலாக ஒரு பாதை தெரிகிறது. கூட்டில் ஒரு எட்டுக்கால் பூச்சி இருப் பது போலவும் ஏதோ பெரிய பிராணி சிக்கி இருப் பது போலவும் தெரிகிறது. இன்னம் எவ்வளவோ இருப்பதுபோல் தோன்றுகிறது.'

'அப்பொழுது ஓவியத்தின் தன்மை மாறிவிடு கிறதே.
'ஆமாம் இப்பொழுது இது அடிமனநினைவு ஓவியமாகி விட்டது,'

பரிசு பெற்ற ஓவியம்

'இதுவா அதுவா என்ற சந்தேகத்தை உண்டாக்கினுல் அது இரண்டுமல்ல என்று ஏற்பட்டு விடாதா?'

'இங்குதான் உலகின் தத்வமே மூடிக்கிடக்கிறது. தோற்றத்திற்கு அப்பால் என்ன இருக்கிறதென்று யாருக்கும் தெரியாது. விஞ்ஞானி கூறுவது கூட அனுமானம்தான். அவரவர்கள் பயிற்சிப்படி வழக்கப்படி அதற்குப் பெயர் கொடுக்கிறுர்கள். மனுேபாவப்படி பொருள் கூறுகிறுர்கள். இதெல்லாம் ஆள், தேசம், காலம் இடத்தைப் பொருத்த விஷயம். இருப்பது எப்பொழுதும் இதற்கெல்லாம் இடமளித்துக்கொண்டு மோனமாய் அமைந்திருக்கிறது. மோனமாய் இருக்கும் ஓவியத்திற்கு நீ ஒரு பொருள் கூறினுய். நானுென்று கூறினேன். இன்னுெருவர் இன்னுென்று கூறலாம். அதனுல்தான் உண்மையான கலைக்குப் பொருளே தேவை இல்லை என்கிறுர்கள் தலைப்பு கொடுத்தால் என்ன கொடுக்காவிட்டால் என்ன?!.. அற்புதமான ஓவியம். கண்காட்சியை சுற்றி முடித்து விட்டு பாக்கிப் பேச்சு பேசுவோம்.'

'ஓ!' விமர்சனத்திற்குப் பிறகு நண்பர்கள் இருவரும் பாக்கிப்படங்களையும் ஓவியங்களையும் ஊன்றி ஆராய்ந்து பார்த்தனர் அதற்கு மூன்றுமணி நேரம்பிடித்தது. கண் காட்சியை விட்டுத்திரும்பு காலில் முதல் நண்பர் சொன்னுர்; 'நான் கண்காட்சி நீதிபதியாக இருந்தால் தலைப்பில்லா ஓவியத்திற்குத்தான் முதல் பரிசளிப்பேன்.'

'நானுக இருந்தால் தரமாட்டேன்.' 'இதெல்லாம் மனுேபாவத்தைப் பொருத்த விஷயம்'.

'அதுதான் கூடாது. உரைகல் உண்டென்று பாவித்துக் கொண்டு விட்டு அதில் தேறவில்லை என்பது விமர்சனத்தில் பெறும் தவறு. உரைகல் இல்லை. இருக்கமுடியாது'

உண்மை என்ற ஒரு உரைகல் உண்டு. அதை விவரிப்பதில் கஷ்டம் இருக்கலாம். அதற்காக இல்லை ஆகிவிடாது'

'உரைகல் நிர்ணயமாகாத போதுதோற்றதை க்ஷண உணர்ச்சியைக் கொண்டுதான் முடிவு கட்ட வேண்டும். அதற்குப் பொருள் இல்லாமலும் இருக்கலாம்.'

இந்த அடிப்படை கட்டம் வந்த பிறகு பேச்சுக்கு இடமில்லாமல் போய்விட்டது. பேச்சற்ற இடம் மோனமா மௌனமா?......

ஒரு வாரத்தில் கண்காட்சி முடிந்து விட்டது. முடிந்த ஒரு வாரத்திற்கெல்லாம் தினசரி பத்திரிகைகளில் கண்காட்சியைப்பற்றி விரிவான விமர்சனங்கள் வந்திருந்தன. கண்காட்சியில் ஓவியத்திற்கான முதல் பரிசு தலைப்பில்லா ஓவியம் தீட்டிய ஓவியக்காரர் ராயருக்கு அளிக்கப்படுவதாகவும், இரண்டு மூன்று பரிசுகள் பற்றி நீதிபதிகள் சம ஆதரவு தந்திருந்ததால் பரிசுகள் சமமாக அவர்களுக்கு அளிக்கப்படும் என்றும், ஒரு செய்தி வெளியாகி இருந்தது. முதல் பரிசு பெற்ற ஓவியத்தைப்பற்றி விமர்சகர்கள் இரண்டொருவர் நீங்கலாக பிரமாதமாகப் பாராட்டி இருந்தனர். பரிசளிப்பு விழா நடைபெறும் தேதியும் இடமும் குறிப்பிட்டு ஒரு செய்தியும் வந்திருந்தது.

குறிப்பிட்ட தேதிக்கு ஒரு வாரத்திற்கு முன்பு கண்காட்சி நிர்வாகிகளுக்கும் தலைவருக்கும் காரிய தரிசிக்கும் உயர் நீதிமன்றத்திலிருந்து தற்காலிக தடை உத்தரவு நோட்டீஸ் ஒன்றும் பிரமாண பத்திர நகல் ஒன்றும் வந்ததைக்கண்டு பிரமித்தனர்.

ரூர்க்கி என்ற மனுதார் முதல்பரிசு தனக்குத்தான் சேரவேண்டும் மென்றும், நீதிபதிகள் குறிப்பிட்டவருக்குச் சேரத்தக்கதல்ல வென்றும், 'மண்டாமஸ்' வழக்கு உயர்நீதி மன்றத்தில் தொடர்ந்திருப்பதாகத் தெரிந்தது. வழக்கின் தன்மையைக் கருதி முதல் பரிசளிப்பதை தடையிட்டு இடைக்கால உத்தரவு பிறப்பிக்கப்பட்டிருப்பதாகவும் தெரிந்தது.

அன்று மாலைக்குள் காரியதரிசியும் தலைவரும் தங்கள் வக்கீலை சந்தித்து விஷயங்களைத் தெரிவித்த போது வக்கீல்தன் யோசனையைக் கூறினுர். இந்த வழக்கு ஒருபைசா பெறுதென்றும், கண்காட்சி நீதிபதிகள் முடிவை சட்டப்படியாராலும் மாற்ற முடியாதென்றும், இருந்தாலும் வழக்கை எதிர்த்துத்தான் ஆக வேண்டும் என்றும் தெரிவித்தார். ஆனுல் இன்னுெருயோசனையும் கூறினுர். குறித்த தேதியில் இரண்டு மூன்று பரிசுகளை வினியோகம் செய்யத்தடை இல்லாததால் விழாவை நடத்தலாம் என்றுர். முதல் பரிசளிக்காமல் இரண்டு மூன்று பரிசுகளுக்காக ஒரு விழா என்பது அவ்வளவு பொருத்தமானதல்ல வென்றும், முதல் பரிசுக்காக மற்றுெரு விழாச் செலவைத்தவிர்க்க வேண்டியதே முறை என்றும் கருதி தலைவரும் காரியதரிசியும் விழாவை வழக்கு முடியும்வரை ஒத்தி வைப்பதென்று முடிவு செய்தார்கள்.

வக்கீல் யோசனைப்படி கோர்ட்டில் எதிர் வழக்காடினர். பூர்வாங்க ஈரங்கிகள் இரண்டு மூன்றுக்குப் பிறகு வழக்கு விசாரணைக்கு வந்தது. சம்பந்தப்பட்ட தஸ்தா வேஜிகள் தாகல் செய்யப்பட்டிருந்தன. மனுதார் தரப்பில் இரு சாட்சிகளும், கண்காட்சியாளர் தரப்பில் இரு சாட்சிகளும் விசாரிக்கப்பட்டனர். பின்னர் வக்கீல்கள் தங்கள் கட்சிகளைத் திறமையாக எடுத்துக் கூறினர். வாதங்கள் முடிந்த பிறகு தீர்ப்பளிக்க நீதிபதிகள் ஒரு தேதியை குறிப்பிட்டனர்.

'இது ஒரு வினுேதமான, ரசமான வழக்கு,

முதலாவது ரெஸ்பாண்டெண்டு ஒரு கண்காட்சி நிர்வாகக்குழுவின் தலைவர். இரண்டாவது

ரெஸ்பாண்டெண்டு காரியதரிசி. மூன்ருவது ரெஸ் பாண்டெண்ட் ஒரு ஓவியர்.

கண்காட்சி நிர்வாகிகள் ஒரு ஓவியக் கண் காட்சி விழாவை நடத்தினர்கள். கண்காட்சிக்கு ஐம்பது படங்களும் நூற்றிமுப்பத்திமூன்று ஓவி யங்களும் வந்திருந்தன. கண்காட்சி நீதிபதிகள் வந்தவற்றை எல்லாம் சீர்தூக்கிப்பார்த்து பரிசுக்கு உரியனவற்றை தேர்ந்தெடுத்திருக்கின்ற னர். அவர்களுடைய தீர்ப்பு நடவடிக்கை தஸ்தா வேஜி 'ஏ' என்ற அடையாளத்துடன் வழக்கில் தாகலாகி இருக்கிறது. முதல் பரிசை தலைப்பில் லாத ஓவியம் எழுதிய 3 வது ரெஸ்பாண்டெண்டு ராயருக்கு நீதிபதிகள் சிபார்சு செய்திருந்தனர். பரிசுகள் வழங்க கண்காட்சி நிர்வாகிகள் தேதி குறிப்பிட்டிருக்கின்றனர்.

இதற்கிடையில் மனுதார், ரூர்க்கி இந்த 'மண்டாமஸ்' வழக்கை ரெஸ்பாண்டெண்டுகள் மீது தொடர்ந்திருக்கிருர். மூன்ருவது ரெஸ்பாண் டென்டுக்கு சிபார்சு செய்யப்பட்டுள்ள முதல் பரிசு தனக்குத்தான் சேரவேண்டும் என்பதுதான் அவ ருடைய முக்ய கட்சி. ஓவியம்தான் தயா ரித்தாகவும், தன்னுடைய பெயருடன் கண்காட் சிக்கு அனுப்புவதாக ஓவியர் தன்னிடம் உறுதி கூறிஇருந்தார் என்றும், ஆனல் மோசடியாக தன் பெயரிலேயே அனுப்பி விட்டார் என்றும், எனவே முதல் பரிசு தனக்குத்தான் உரியதென்று கோர்ட் டார் தீர்ப்பளித்து, அந்தப்படி பரிசை வினியோ கிக்கும்படி 1, 2 ரெஸ்பாண்டென்டுகளுக்குக் கட் டளை பிறப்பிக்க வேண்டுமென்றும் வழக்கில் கோரி இருக்கிருர்,

முதல் இரண்டு ரெஸ்பாண்டெண்டுகள் வழக் கில் தாகல் செய்துள்ளபதிலில், தாங்கள் கண் காட்சி நீதிபதிகள் சிபார்சுப்படி நடக்கக் கட மைப்பட்டவர்கள் என்றும், மற்ற விஷயங்கள் பற்றி தங்களுக்கு எதுவும் தெரியாதென்றும், அவை எல்லாம் உண்மையாக இருந்தாலும் கூட ஓவியருக்கும் மனுதாரருக்கும் இடையே தீர்த்துக் கொள்ளப்பட வேண்டிய தனி விஷயமென்றும் அதில் தங்களுக்குச் சம்பந்தமில்லை என்றும், எனவே மனுவை செலவு தொகையுடன் தள்ளு படி செய்யவேண்டுமென்றும் தெரிவித்திருக்கின்ற னர்,

மூன்ருவது ரெஸ்பாண்டெண்டாக சேர்க்கப் பட்டுள்ள ஓவியர் ராயர் வழக்கு சுத்த மோசடி என்றும் பேராசையால், விஷமத்தனமாக பிறர் தூண்டுதலால் தொடரப்பட்டுள்ள தென்றும், பரிசு தனக்கு த் தா ன் சேரவேண்டியதென்றும் இன்னம் பல விஷயங்களையும் கூறிஇருக்கிருர்.

உண்மையில், வழக்கில் முடிவு செய்ய வேண் டிய விஷயத்தில் அதிக சிக்கலைக்காணேம். ஆனல் இரு தரப்பு வக்கீல்களும் ஓவியக்கலை சம்பந்தமான சகல சித்தாந்தங்களையும் கூறி, மறுத்து, ஆராய்ந்து குழப்பி தங்கள் கட்சிக்கு ஆதரவு தேட முயன்றது வழக்குக்குத் தேவைதான என் பது சந்தேகமே.

விஷயங்களை நுணிகிப்பார்த்தால், சில விஷ யங்களில் விவாதத்திற்கே இடமில்லை என்பதும், இரு தரப்பாராலும் ஒப்புக்கொள்ளப் பட்டவை என்பதும் தெளிவாகும்.

ரூர்க்கி அச்சாபீஸில் வேலை செய்யும் 'மிஷின் மான். மூன்ருவது ரெஸ்பாண்டெண்டு ஒரு ஓவியர் ஓவியர் ஒரு நாள் அச்சாபீசுக்குப் போயிருந்த பொழுது ரூர்க்கி ஒரு பெரிய தாளின் மேல் நின்று கொண்டு வேலை செய்வதைப் பார்த்தார். தாள் முழுவதும் இடைவிட்டு விட்டு மையாகவும் சுருங் கியும் மடிந்தும், நசுங்கியும் கிடந்தது. அந்தத்தா ளின் ஒரு பகுதியைப் பார்த்த ஓவியருக்கு மனதில் ஏதோ ஒரு எண்ணம் உதயமாகிஇருக்க வேண்டும் என்று நிச்சயமாக அனுமானம் செய்யலாம். ஏனென்ருல் அடுத்த வினடி ரூர்க்கியை நகரச் சொல்லி விட்டு தாளை எடுத்து ஓவியர் பார்த்த தாக ரூர்க்கிவாக்குமூலத்தில் சொல்லி இருக்கிருர். தாளை எடுத்து சமப்படுத்தி விட்டு ஓவியர் ரூர்க் கியை இது என்ன தாள் என்று கேட்டதாகவும், அதற்கு அவ்வப்பொழுது மிஷின் ரோலரில் சிக்கிக் கொண்டு மையாகி கிழிந்து நசுங்கி கெட்டுப் போன தாள் என்றும் ரூர்க்கி சொல்லியதாகவும் தெரிகிறது. ஓவியர் வாக்கு மூலம் இதை எல்லாம் ஒப்புக் கொண்டிருக்கிறது. தாளை எடுத்துக் கொண்டு போக ஓவியர் அனுமதி கேட்ட பொழுது ரூர்க்கி தமாஷ் செய்திருக்கிருர். வாராந் தர சம்பளமும் மையாகி சிக்கி கெட்டுப்போகும் தாளும் தன் உடைமை, தாராளமாக எடுத்துப் போங்கள் என்று ரூர்க்கி சொல்லி இருக்கிருர் ஓவி யர் இந்தத் தாளை அசலாக வைத்துக் கொண்டு அப்படியே நகல் ஒன்றை தயாரித்து, அதைக் கண் காட்சிக்கு அனுப்பி விட்டார். அதற்கு இப்பொ ழுது பரிசளிக்கப் பட்டிருக்கிறது.

விவாதத்தில் உள்ள விஷயமெல்லாம் இந்த ஓவியத்தின் உரிமை யாருடையது என்பதுதான். இதைப் பற்றி எனக்கு எவ்வித சந்தேகமோ தயக் கமோ ஏற்படவில்லை. வேலை செய்த ரோலரில் சிக் கியதின் விளைவாக தாளில் ஒரு ஓவியம் உண்டாகி இருக்கலாம். அதைக்கொண்டு ஓவியத்தை அவனு டைய தென்று சொல்லிவிட முடியாது. இதுகீழே நழுவ விட்ட பணத்தைப் போன்ற தென்று ரூர்க்கி வக்கீல் வாதாடியதில் தர்க்கவலுவில்லை ஏனெனில் ஓவியம் என்பது உள்ளத்தின் கண் கொண்டு, உலகினின்றும் தேர்ந்தெடுக்கப்படும் அழகு, கருத்து அல்லதுவேறெதோ ஒன்று, இந்த ஓவிய திருஷ்டி ரூர்க்கிக்கு கிடையாதென்பது சொல்லாமலே வெளிப்படை. இல்லாவிட்டால் காலின் கீழ் போட்டு மிதித்துக் கொண்டிருப் பான? இதற்குப் பரிசு கிடைத்து விட்டதென்று தெரியும் வரையில் இந்தத் தாளைப்பற்றிய நினைப்பு அவனுக்கு வந்ததாக வாக்கு மூலத்தில் அவன் கூற வில்லை.

ரூர்க்கியைக் கையாளாகக்கொண்டு யாரோ புரட்சி வாதிகள் தொடர்ந்துள்ள வழக்கு இது என்று ஓவியர் கூறும் வாதத்தை இங்கு ஆராயத் தேவை இல்லை. அறிவு பூர்வமாக ஒருவன் சிருஷ்டித்தாலன்றி கலை ஆகாது. அல்லது அறிவு பூர்வமாக ஒன்றை தேர்ந்தெடுத்து உலகின்முன் கொண்டுவந்து வைக்கவேண்டும். அப்படிக் கில்லாத வரையில் எதையும் கலையில் தாதுப்பொருளாகத் தான் பாவிக்கமுடியும். பாவிக்கவேண்டும். பார்வையால் தேர்ந்தெடுக்கப்பட்டு கையின் திறம் பேருவிட்டால் ஓவியமே இல்லை.

ரூர்க்கிக்கு இந்தப் பார்வை இருப்பதாக அவனே கனவு கண்டிருக்கமுடியாது. அவன் கழித்து எறிவதுதான் கலைத்திறமை என்று ரூர்க்கி வக்கீல் வாதாடும் எல்லையை எட்டவில்லை. இருந்தாலும் அவன் வழக்கே இந்த மாதிரி வாதமாகத் தான்படுகிறது. முதலாளிக்குச் சொந்தமான தாளை தான் எடுத்தெறிந்த காரணத்தால் தன்னையும் அறியாமல் ஏற்பட்ட விளைவில் அவன் உரிமை கொண்டாடக் கிளம்பியது தமாஷாகத் தான் இருக்கிறது. சட்டப்படிக்கோ நியாயப் படிக்கோ ஏற்றுக்கொள்ளத் தக்கதல்ல.

எனவே வழக்கை தள்ளுபடி செய்கிறேன். அவரவர்கள் செலவு தொகையை அவரவர்களே பொருத்துக் கொள்ளவேண்டும் சாஸ்திரி. நீதிபதி ராவ்: 'இத்தீர்ப்பு எனக்கும் உடன்பாடு. அச்சாபீஸ் தாளையே ஓவியக் கண்காட்சிக்கு அனுப்பி இருந்தால் இதே முடிவுக்கு வரமுடியும் என்று நான் சொல்லத் தயாராக இல்லை. நல்ல வேளையாக அந்தப் பிரச்னை எழவில்லை மூன்ருவது ரெஸ்பாண்டெண்டில்லாவிட்டால் ஓவியம் தாளாகவே தான் காலடியில் கிடந்து குப்பைமேட்டுக்குச் சென்றிருக்கும். தாள் ஒரு தூண்டு கோல் 'தூண்டு கோல் நெருப்பாகாது.'

4

கோர்ட்டு வழக்கு கண்காட்சி நிர்வாகிகளுக்குச் சாதகமாக முடிவடைந்த் பிறகு பரிசளிப்பு விழாவுக்கு தேதியைக் குறிப்பிட்டார்கள். அதற்கு வேண்டிய எல்லா ஏற்பாடுகளும் ஓரளவு வீம்புடன் செய்யப்பட்டன.

பரிசளிப்பு விழா அன்று காலை கண்காட்சி கமிட்டித் தலைவர் வீட்டின் முன்னறையில் இருந்தார். எதிர்பாராமல் சந்தடியின்றி ஓவியர் ராயர் எதிரில் வந்ததும் முதலில் தன்னையும் அறியாமல் திடுக்கிட்டு விட்டார். மறுகணம் தங்கள் கட்சியை விட்டுக்கொடுக்காமல் எதிர் வழக்காடிய கண்காட்சிக் கமிட்டியைப் பாராட்ட அவர் வந்திருப்பதாக அகமகிழ்ந்து கொண்டார். 'நேரில் ஒரு விஷயத்தைச் சொல்லி விளக்கம் கூறிவிட்டு அவசரமாகப் போக வந்திருக்கிறேன்.'

'அவசர ஜோலியாக நான் பத்துமணி ரயிலில் இப்பொழுது போகவேண்டி இருக்கிறது. ஆகையால் மாலை விழாவில் கலந்துகொள்ள முடியாமல் இருப்பதற்கு மன்னிப்பு கோரவந்தேன். பிரயாணத்தைத் தவிர்க்க முடியவில்லை. மன்னிக்கவும் பரிசை என் சார்பில் ரூர்க்கி இடம் கொடுத்து விடவும் என்று கமிட்டியாரைக்கோரி இதோ ஒரு கடிதம் கொண்டுவந்திருக்கிறேன். அதை ஏற்றுக் கொள்ளவேண்டும். இதோ கடிதம். பரிசு எனக்கு என்பதை விளம்பரம் செய்யத் தவறவேண்டாம். சிரமத்திற்கு மன்னிக்கவும்.' தலைவர் தகவலைக் கேட்டுக்கொண்டார். முன்பின் யோசிக்க அப்பொழுது தோன்றவில்லை. சம்பிரதாயமான முறையில் தகுந்த ஏற்பாடு செய்வதாகப் பதில் சொல்லி விட்டார். நன்றி தெரிவித்துவிட்டு ராயர் வெளியே விரைவாகச் சென்று விட்டார்.

அவர் போன பிறகுதான் இந்த விஷயங்களில் எல்லாம் ஏதோ கிண்டல் இருப்பது போல் தலைவருக்குத் தோன்றிற்று. வழக்கில் ஜெயித்தவன் தோற்றவனுடன் சமரசமாக ஏன் போகவேண்டும்? ஆனால் இந்த சந்தேகம் பற்றி முடிவு காண வேண்டிய சிரமத்தை மனதிற்குக் கொடுக்க அவர் விரும்பவில்லை. ஹாய்யாக இரண்டு கால்களையும் சாய்மான நாற்காலியில் நீட்டிக்கொண்டார்.

சில விநாடிகளுக்குள் காரியதரிசி தன்னைப் பார்க்கவந்தபொழுது எதுவும் பூர்வ பீடிகை இன்றி அந்தக் கடுதாசை அவரிடம் கொடுத்தார். அவரும் என்னவென்று கேட்காமல் கடிதத்தை இரு முறை படித்துப் பார்த்தார்.

சந்தேகம் கைமாறிவிட்டது போல் காரியதரிசியின் முகம் மாறிற்று.

வலை

தர்மு சிவராமு

மாலைக் கதிர்வாள் வெட்டு
பரிசுப் புருத் துடிப்பு
நெஞ்சின் பால் வெளியில்
பாலைத் தகட்டுப்
படபடப்பு.
நடை தளர்ந்தது.
இது எல்லை?
ஊர்ந்து தொடர்ந்த நிழலின்
விரல் விளிம்பு.
எதிரே
நில வரிப்பு—வாழ்வு!
வலை வரிப்பா?—வாழ்வா?
திரும்பிப்ப ார்த்தேன்.
தனத் திரள் உருகி வழிந்து
தார்பாதையாக நீண்டு
வான்கடல் படுகைத்
தொருவான் வரை கிடந்த
நிழலின் இழுப்பு.
கால் விரல் கண்ணியில்
நான்.

பழமை திரும்பி வருமா?

வ. ரா.

[இது வ. ரா. மாதம், அவருடைய பழய கட்டுரை ஒன்று இங்கு எடுத்துத்தரப்படுகிறது]—ஆசிரியர்

வெகு பேர்களுக்கு பழமையின் பேரில், ரொம்பவும் மோகம். பழமை திரும்பி வரப் படாதா என்று அவர்கள் பெருமூச்சு விட்டுக்கொண்டேயிருக்கிறார்கள். 'ஆகா அந்த நாள் மாதிரி வருமா' என்று அடிக்கடி அங்கலாய்த்துக் கொள்ளுகிறார்கள். அந்த நாள் என்று அவர்கள் எந்தக் காலத்தை அல்லது எந்த நிலையை குறிப்பிடுகிறார்களோ அது தெரியவில்லை.

இவர்களுக்கு ஏன் பழமையில் மோகம் வர வேண்டும்? இவர்கள் பழமை என்று பாராட்டும் நிலைமை, அவர்கள் கற்பனையால் கண்டதுதான். அத்துடன் பழகின தோஷம் கூட கிடையாது. ஏன் என்றால், இப்பொழுது உயிரோடு இருக்கிற ஒருவர், ஆயிர வருஷத்துக்கு முந்தி இருந்த பழமையோடு பழகியிருக்கமுடியுமா? எனவே. ஆயிரம் வருஷத்துக்கு முன் இருந்ததாக நினைப்பது இவர்களுடைய கற்பனைதான் இந்த கற்பனைச்சித்திரத்துக்கு சரியான சரித்திர ஆதாரமும் இருப்பதில்லை.

எதிர்காலத்தைப் பற்றியதும் கற்பனைதான். சென்ற கால பழமையைப் பற்றியும் கற்பனை செய்யவேண்டியிருக்கிறது. அப்படியிருக்க, பழமையைப் பற்றிய கற்பனையில், பயமும் ஒருவித வெறுப்பும் இவர்களுக்கு ஏன் இருக்கவேண்டும்?

பழமை என்று சொல்லும் பொழுதும் நினைக்கும் பொழுதும், அது ஏதோ பழகினது மாதிரியும் புனிதத்தன்மை கொண்டது மாதிரியும் ஒருவித மயக்கம் இவர்களுடைய சிந்தனையில் உதயமாகின்றது. மூதாதைகள் வழிபாடு என்ற பக்தி வணக்கம் இருக்கும் வரையில், இந்த மயக்கம் இருக்கத்தான் செய்யும். ஆராய்ச்சி செய்து பார்த்தால் தான், இந்த மயக்கம் ஓடிப்போகும்.

ஆயிரம் வருஷத்துக்கு முன், தமிழ் நாடும் ஹிந்துஸ்தானமும் இருந்த நிலைமையை சித்தரித்துப் பார்த்தால்தான், 'ஐயோ! இந்த அறுதல் பழசு நமக்கு என்னத்துக்கு?' என்று தோன்றும்.

தமிழ் நாட்டில் ஆங்காங்கே சிற்றரசர்களும் பாளையக்காரர்களும் இருந்தார்கள். அனைவரும் ஒரு குடைக்கீழ் இருந்த காலமே இல்லை என்று சொல்லலாம். சேர, சோழ, பாண்டியர் என்ற மூவேந்தர்களுக்குள் எப்பொழுதும் மனக் கசப்பும் போரும். இந்த மாதிரி ஆளுகைக்கு கீழ், தமிழ் நாடு இப்பொழுதும் இருக்க வேண்டும் என்பது பழமைப் பிரியர்களின் கோரிக்கையா?

ஆயிர வருஷங்களுக்கு முன், தமிழ் நாட்டில் விவசாயமான பூமி மிகக் குறைவு அப்பொழுது விவசாயமான பூமிக்கு அதிகமாக இப்பொழுதும் சாகுபடி யாகப்படாது என்பது பழமைப் பிரியர்களின் ஆசையா?

போக்குவரத்துக்குரிய சாதனங்களை எடுத்துக் கொள்வோம். பொதி மாடு, கட்டை வண்டி, பல்லக்கு முதலியவைகள்தான் அக்காலத்து முக்கிய சாதனங்கள். அதே சாதனங்களைக்கொண்டு, நம்மவர்கள் தற்போதும்வாழ்க்கை நடத்த முடியுமா? 'கட்டை வண்டியா? அப்பா! எலும்பு நொறுங்கிப் போகுமே' என்று அலறும் நபர்கள், பழமையைப் பற்றிப் பேசுவதில், ஏதேனும் அர்த்தம் இருக்கிறதா? பேசினால், அது உளறல் என்றுதான் கொள்ள வேண்டும்.

ஆகார வகைகளைப் பார்ப்போம். இட்லி—சட்னி, பல வகையான கறி தினிசுகள், சேமியாப் பாயசம், ஹல்வா, ஜிலேபி, வாங்கி பாத் போன்ற வாய்க்கு ருசியானதும் மனதுக்கு பிடித்துப் போனதுமான ஆகாரங்களையும் உருளைக்கிழங்கு, தக்காளி போன்ற காய்கறிகளையும், ஆப்பிள், சாத்துக்குடி, ஆரஞ்சு போன்ற பழவகைகளையும் விட்டுவிட்டு, பழமையிலிருந்த புளியங்காய் துவையல், அதிர்சம், சுரைக்காய், சிறு நாகைப்பழம் போன்றவைகளை சாப்பிட்டு, பழமைப் பிரியர்கள் திருப்தி அடைவார்களா? அல்லது அந்த மாதிரி வாழ்க்கையை, மூன்று நாள் சேர்ந்தாற்போல். இவர்களால் நடத்த முடியுமா? ஏன் யோசனை செய்யாமல் பேசுகிறார்கள்!

நவ நவமான சோப்புகள், முகப் பவுடர்கள், வாசனை சாமான்கள், மணத்தினால் மனதைப் பூரிக்கச் செய்யும் வத்தி வகைகள், ஜவ்வாது, அத்தர் முதலிய மனதுக்கு இனிமையான பொருள்கள் இப்பொழுது நம்மவர்களின் வாழ்க்கைக்குள் புகுந்து, குவிந்து கொண்டு விட்டன. இவைகளை அடியோடு உதறித் தள்ளிவிட்டு, தென்னை நாறினால் தேகத்தைத் தேய்த்து மிருதுவாக்கிக் கொண்டு. எருக்கம்பூவை மோந்து பார்த்து, மண்ணைக் குழைத்து பொட்டு இட்டுக்கொண்டு, வாழ்க்கையை உல்லாசமாக கழிக்க, இவர்களால் ஆகுமா? ஆகாது. பிறகு ஏன் பழமைப் பிதற்றல்?

ஆடை அரை மனிதன் என்று மேதாவி ஒருவர் சொல்லுகிறார். அதுவும் இப்பொழுது பெண் மணிகள் அணிந்து கொள்ளும்ஆடைகள் கண்ணைப் பறித்துக்கொண்டு போகின்றன. நாசூக்கான

ரவிக்கை, அதற்குள் 'பாடி' என்று நாகரிக பாஷன் களை நமது பெண் மணிகள் சிருஷ்டி செய்து விட்டார்கள். பழமை என்ற பேச்சுப்படி, மலையாளத்தில் நூறு வருஷங்களுக்கு முன், பெரும்பான்மையான ஸ்திரீகள் மேலாடையும் இல்லாமல் இருந்தது போல, நமது பெண்மணிகளும் இருக்க நேரும். இந்த அபத்தமும் அவலக்ஷணமும் அநாகரிகமும் நிறைந்த நிலைமையைப் பழமையின் பெயரால், வடிகட்டின முட்டாள்கூட வரவேற்க மாட்டான். அப்படி யாயின், பழமையைப் பற்றி ஏன் பாவனைப் பேச்சு பேச வேண்டும்?

பழமையைப் பற்றி பேசுபவர்கள், அவர்களுடைய மூதாதைகள் அணிந்து கொண்டிருந்த ஆபரணங்களைப் பற்றி, நினைத்துப் பார்த்ததுண்டா? பண்டைக் காலத்து தமிழர்களின் ஆபரணங்கள் காதோலை. கருமணி, பூச்சிக்கூடு, ஜிமுக்கி. புலாக்கு காரை முதலியன. இவைகளைப் பற்றி இப்பொழுது நமது பெண்களிடம் பிரஸதாபம் செய்தால்போதும், அவர்கள் நம்மோடு சண்டைக்கு வந்து விடுவார்கள். பாதசரம் கூட அநாகரிகம் என்று நினைக்கும் தற்கால பெண்கள், விலங்குகளைப் போல இருக்கும் கெட்டி வெள்ளிக் காப்புகளை (பழமை!) கால்களில் போட்டுக்கொள்ள சம்மதிப்பார்களா?

ஸோபாக்கள், மெத்தென்று இருக்கும் கட்டில்கள், பம்பரம் போல நாலு பக்கமும் சுழலும் நாற்காலிகள், மேஜைகள், மின்சார விசிறிகள், விளக்குகள் முதலியன நம்மவர்களின் வாழ்க்கையை கவ்விக்கொண்டு விட்டன. தரையில் உட்கார்ந்து தமாஷாகப் பேசுவதும் தாம்பூலம் போடுவதும்-சொல்லப்போனால் ஆகாரம் சாப்பிடுவதும் கூட-இனி சாத்தியப்படாத சங்கதிகள். பீரோக்கள், ஷெல்புகள், இப்பொழுது அவசியமாகப் போய் விட்டன. சுவரிலிருக்கும் மாடங்களையும் பிறைகளையும் நம்பி, நமது பெண்கள் இனியும் வாழ்க்கை நடத்த சம்மதியார்கள். எனவே, பழமையைப் பற்றிப் பேசி லாபம் என்ன?

சீன்கள் நிறைந்த நாடகங்களும் சிரித்துச் சிரித்து வயிறு அறுந்து போகும் சினிமாப்படங்களும் நம்மவர்களின் வாழ்க்கையை, இறுகப் பிடித்துக் கொண்டு விட்டன. துணியை திரையாகப் பிடித்துக் கொண்டும் உரல்களை ஆசனங்களாக உபயோகித்தும் நடத்திய, பழமை நிறைந்த தெருக்கூத்துகளை, இனி யார் லக்ஷியம் செய்வார்கள்? காண்டாமிருகம் பார்க்காது அப்பா, என்று எல்லோரும் ஆண், பெண் அடங்கலும் ஏக மனதாய் கேலி செய்வார்கள். எனவே, பழமைப் பிதற்றல் அர்த்தமில்லாதது.

இனி, பழமையான சடங்குகளையும் ஆசாரங்களையும் மதக் கோட்பாடுகளையும் பார்ப்போம். இவைகளில், நூற்றுக்கு தொண்ணூற்று ஒன்பது பேர்களுக்கு பிடித்தமும் இல்லை; நம்பிக்கையும் கிடையாது. இவைகளில் பழமையைப் பாராட்டுவதிலும் பயனில்லை. இவைகள் எல்லாம் தங்கள் ஆவியை இழந்து தவிக்கின்றன. இவைகள், பார்வைக்கு அனுஷ்டானத்தில் இருக்கலாம். ஆனால் அவைகளுக்கு, நம் வாழ்க்கையில் ஒட்டிக்கொண்டு நிலைக்கும் படியாக, பசையே இல்லை. எனவே, இந்தத் துறையிலும், பழமை, என்பது தற்போதைய வாழ்வுக்கு ப்யன் படாத ஒன்றாகும்.

'இல்லை, இல்லை. பழமையைப் பற்றி பேசும் பொழுது, நாங்கள் பண்டைக் காலத்து நற்குணங்களைப்பற்றிதான் நினைத்துக் கொண்டிருக்கிறோம். அப்பேர்ப்பட்ட தன்மைகள் நம்மவர்களுக்கு தற்போது மிகமிகத்தேவை' என்று பழமைப்பிரியர்கள் தங்கள் பழமை மோகத்துக்கு வியாக்கியானம் செய்யலாம். இதுவும் அபத்தமாகும். பாண்டவர்களுக்கு பங்கு கொடுக்கமாட்டேன் என்று வல்லடி வழக்குப் பேசிய துரியோதனும் அவனைச் சேர்ந்தவர்களும் நற்குணம் படைத்தவர்களா? வீட்டில் தனது மனைவி மனவேதனைப் பட்டுக் கொண்டிருக்க, விலைமாதிகன் இல்லம் சென்ற கோவலனைப் போல, பழமைப்பிரியர்க்ள் வாழ உளம் கொண்டிருக்கிறார்களா? எல்லாக் காலங்களிலும் நல்லவர்களும் தீயவர்களும் கலந்துதான் இருக்கிறார்கள் என்ற உண்மை, பழமையில் மோகங்கொண்டவர்களின் கண்ணில் படாதது, நமது நாட்டின் துர்பாக்கியமே.

வள்ளுவனார் காலத்து தமிழ், அந்தக் காலத்துக் காசுகள், அக்காலத்து நடையுடை பாவனைகள், அரசியல் முறை, வாழ்க்கைத் திட்டம் எதுவும் இக்காலத்துக்கு துளிக்கூட பொருத்தமே இல்லை; செல்லவும் செல்லாது.

பழமை, இனி ஒரு நாளும் திரும்பி வர முடியாது. பழமையைப் பற்றிப் பேசுவது மரித்துப் போன குழந்தையைப் பற்றி புலம்புவது போல என்பது தான் உண்மை. சிந்தனசக்தியை இழந்தவர்கள் தான் பழமையைப்பற்றி கிளிப்பிள்ளைகளைப் போல பேசுவார்கள். உலகம், ஸயன்ஸிலும் பொருளாதாரத்திலும் அரசியல் திட்டத்திலும் பிரமிக்கத்தக்க முற்போக்கு அடைந்து வருகிறது. இந்த முற்போக்கைப் போலவே, வெறுக்கத்தக்க தன்மைகளும் நிலைமைகளும். நாளுக்கு நாள் மலிந்து வருகின்றன. இந்தக் காலத்தை சமாளித்து, வெற்றியுடனும் சுகப்பெருக்குடனும் வாழ வழிகளைத் தேடுவதுதான் புத்திசாலித்தனமாகும். அதுதான் பொறுப்பு வாய்ந்த தன்மையாகும். மனிதனுடைய செயல் திறனையும் சாகஸத் திறனையும் சிந்தனை சக்தியையும் உபயோகித்து விமோசனத்திற்கு மார்க்கத்தை தேடுவதற்கு இது தான் தக்க தருணம்.

கரணம் தப்பினால் மரணம். இந்த சந்தர்ப்பத்தை நழுவ விட்டு விட்டு, பழமையைப்பற்றி பேசுவது விபரீதமாக முடியும். பழமையிலுள்ள நல்லவைகளையும் உபயோகமுள்ளதுமானவைகளையும் வைத்துக்கொண்டு, புதுமையைப் படைப்பது தான் சிந்தனையாளர்களுக்கு அழகாகும்.

இட மாற்றம்

தி. சோ. வேணுகோபாலன்

காட்டு மலர்க்குலம்
நின்
கால்வழி
கருப்பெற
ஜீவ
ரசம் தரும்
விருந்து
இதயத்தில் உறங்கும்
இன்பப் பனித்துளி :
உள்ளே
உதய ஒளி
ஊசியாய் உட்புகுந்து
உதிரம் பெருக்கி
தன்
இளம் சிவப்பேற்றும்
ரஸவாதம்
தெரிந்த
தேனீ

மலை முடி
பனிச்சடை
புகுந்து புறப்படும்
குளிர்
தூய தென்றல்
தழுவு
மரக் கிளையின்
கீழ்
கருந் திராட்சைக்
குலைபோல்
ஆறு சுவர் வீட்டில்
இருந்து வளர்ந்து
சுவை தெளிந்து
இசை பயின்ற
தேனீ
நீ.
ஆயினும்
நீ
ஈ!
....
கா மறந்து
வண்ணக்
கதிர் மறந்து
ஜீவ
ரஸம் மறந்து
தூய
கால் மறந்து
இங்கு வந்த
தேன் நீ?

கத்தரித்து
வெட்டி விட்ட
நட்ட நடுப்
பாத்தியிலே
மரச்
சட்டங்கள் சேர்த்து
சதி செய்த வீட்டுக்குள்
வந்த
தேன் நீ?

நின் நா
இன்பச்
சுவையறியும்
நா :
நா கரி கமற
முடியாமல்
திணறி
நகரம் எனும்
பெரும்
நரகப் புழுக்கத்தில்
வாட வந்த
தேன் நீ?

புத்தொளி தொட்ட
தென்றல் அல்ல:

பூமிக்குள்
புழுங்கி இருண்டு
வெந்து வெகுண்டு
கருத்துக் கிடந்த
பெட்ரோல்
டீஸல்
கனன்று கக்கிடும்
ஆவேசப் பெருமூச்சு
புகை
விஷக் காற்று!
புதுமலர் அல்ல:

மனிதக் கும்பல்
கும்பிச் சுமை
குறைத்த கழிவில்
புழுத்த எருவில்
பிறந்த,
அரி தாரம்
அதரச் சாயம்
பூசிய
பகட்டுப் பூக்கள்
மலடு!

உணர்ச்சியை உசுப்ப
ஓடி வரும்
உதயக் கதிரின்
உயிர் நிறம் அல்ல;

உலோகத் திமிரை
ஒடுக்கி உருக்கும்
உதிர வண்ண
உலை வாய்
தீ!
கொல்லன் பட்டறை!

நீ
ஈ!
தேனீ ஆயினும்
நீ ஈ!
....
உறங்கு தெண்ணீர்,
படிகப் பாளம்,
கண்ணாடிச் சில்,
காக்கைப் பொன் செதில்
முன்னாள் மஸ்லின்,
இன்னாள் நைலான்,
ப்ளாஸ்டிக் பை,
ஒளி ஊடுருவும்
உன்னிரு
மன் மத
இற கால்
இசை பிறப்பித்து
உலவிய நீ
உருக்காலை
வந்த தேன்?

வெல்லம் காய்ச்சி
வெந்நீர் கலந்து
உன்தேன் என்றே
உலகே மாற்றும்
உலுத்தர் மத்தியில்
வந்த
தேன்?
.. ..
பளிங்குச் சிறகில்
படர்ந்ததே
கரிப் புகை !
இசை தடுமாறி
நீ
வெந்து நொந்து
துவண்டு
மடிந்தாய் இன்று !
.. ..
ஓஹோ ஹோ என்று
ஊர் கூட்டி
தத்தம்
பேர் நாட்டி
மேடை மிசை
உன்னிசையில்
கொஞ்சம்
மென்று மிழ்ந்து
ஒப்பாரி வைத்து
ஓய்ந்து விட்டார்
எல்லோரும்!

சாகா
ரமுனக்கு
ரசனமா
சய்தார்கள்?

த்தம் புதுத் தேனீ
றப்பதற்கு முன்பே
பட்டி புதுப்பித்து
மழுகு மணம் பரப்பிக்
ரத்துக்
டக்கின்றார்!
அவரெல்லாம்
அறிவுக்கண் கொண்டவர்கள்!
அங்காடிக் காரர்கள்!
ராஜரிகம் தேர்ந்தவர்கள்!
ரஸக் குருட்டுப் பேர்வழிகள்!
.. ...
கொல்லன் பட்டறை
புகழ் பாட
இசை மாறி
வுசை பாட
போகாத ஊருக்குப்
போனாய் !
புழுதியிலே
நோகாமல்
(அவரெல்லாம்
நோகாமல்)
உன்னை
நெருப்பில் கலந்து விட்டார்!
———
தன்னியற்கை சூழலிலே
தனியின்பம் காணாமல்;
புழுதி புரண்டால்—
வருவது,
புகழும்
நிலைத்த நினைவும்
அல்ல—
அழுகல் சொறி வாடை !

உனை விட்டு
உன் குலமே
ஒதுங்கும் !

கோலன் (:) நிறுத்தக் குறியின்
புது உபயோகம்,

க (Ka) — :க Gha)

ச-வுக்கு — ஐ இருக்கிறது

ட (Ta) — : ட (Da)

த (Tha) — : த (Dha)

ப (Pa) — : ப (Ba)

உங்கள் காதுக்கு

சு. ச.

விமர்சனம் என்பதே இப்போதைக்குத் தேவையற்ற சங்கதி என்றோ அல்லது என்றைக்குமே அவசியம் இல்லாதது என்றோ ஒரு அபிப்பிராயம் பரவலாக உருவாகி வெகுவாகப் பரவியுள்ள காரணத்தால் தமிழ்ப் பத்திரிகைகள் அந்தத் துறையில் ஈடுபாடு செலுத்துவது கிடையாது. இன்னும் சொல்லப் போனால் அது ஏதோ சிலரின் தனிப்பட்ட வேலை என்று கருதி விடுகிறார்கள். கொஞ்சம் விதிவிலக்காக. சுதேசமித்திரன் பத்திரிகை அழுத்தமான கருத்துக்கள் தாங்கிய கட்டுரைகளை முன்பெல்லாம் அவ்வப்போது பிரசுரித்தது உண்டு. சிகரம் வைத்தாற்போல் 1956-ஆம் வருஷத்திய தீபாவளி மலரில் சிறு கதை, நாவல், நாடகம், கவிதை, கட்டுரை என்று தனித்தனியே தலைப்பிட்டு, தோற்றம், வளர்ச்சி, சாதனை பற்றிய மதிப்பீட்டுக்கு வழி செய்யப் போய். பின்னல் சிறு கதை, நாவல் இரண்டுக்கும் மறுப்புக் கட்டுரைகள் வெளியிட வேண்டிய அவஸ்தைக்கு ஆளானதாலோ என்னவோ, அதுவும் இப்போது அம்மாதிரிக் கட்டுரைகளை வெளியிடுவதில்லை. மற்ற பத்திரிகைகளைப் பற்றி நினைப்பானேன் !

ஆனால் சமீபத்தில் இது விஷயமாக ஒரு மாறுதல் ஏற்பட்டிருப்பது தென்படுகிறது. ஆனந்த விகடனின்' பத்துக் கேள்விகள்' பகுதியில் எழுத்தாளர் ஒருவரைப் பேட்டி கண்ட போது, நடுவிலே விமர்சனம் பற்றியும் ஒரு கேள்வி விழுந்திருக்கிறது. விகடனின் அக்கறை வியந்து பாராட்டத் தக்கதாக அமையும்போது, எழுத்தாளர் ஜெயகாந்தன் அளித்த பதிலோ அலட்சியம் நிரம்பியதாக இருக்கிறது, 'விமர்சகரா? நானறிந்த மட்டில் அப்படி ஒருவர் இங்கே இல்லை ஐயா? என்பது பதில். விமர்சகன் எழுத்தாளனைப் புறக்கணித்தால் அவனுக்கு நஷ்டம் இல்லை. நல்ல எழுத்து எதையும் மீறி மிதக்கும். விமர்சகனை எழுத்தாளன் அலட்சியம் செய்தால் ஆபத்து யாருக்கு?

விகடன் பேட்டிக் குறிப்பு இவ்வாறு அமைய, கல்கி இன்னும் சற்று அதிகமாகவே கவனம் செலுத்தி இருக்கிறது. மிகச் சமீபத்திய இதழில் தமிழ்ச் சிறுகதைகளைப் பற்றிய கருத்தோட்டம் பகிரங்கமாகக் காணப்படுகிறது, 'சிரிக்கவும் சிந்திக்கவும்' என்ற தலைப்பில் 'முப்பது வருஷ காலம் பத்திரிகைகளுடன் தொடர்பு கொண்டவர்' பிரபல சென்னை ஆங்கில ஏட்டில் வெளியான புத்தக மதிப்புரை ஒன்றை மறுக்கும் வகையில் எழுதி இருக்கிறார். இதில் சிரிப்பதற்கு ஏதும் இல்லை. சிந்திப்பதற்காகவே முழுக்க முழுக்க அக்கறை ஏற்றி இதை முழு நீளக் கட்டுரையாகவே செய்திருக்கலாம். என்றாலும், செய்த அளவுக்கு வரவேற்க வேண்டியது தான்.

தூண்டுதலாக அமைந்த மதிப்புரை சுந்தர ராமசாமியின் சிறுகதைத் தொகுப்புக்கு ஆர். ஏ. பத்மனபன் சமீபத்தில் ஹிந்துவில் எழுதியது என்பது புரிகிறது, அதில் கு. ப. ரா, வுக்குப் பிறகு இப்போது தான் திருப்திகரமான சிறுகதைத் தொகுதியைப் பார்ப்பதாக மதிப்புரையாளர் கூறியிருக்கிறார். இந்த நீண்ட 'இடைவெளி'யைக் கல்கி கட்டுரையாளர் மறுக்கிறார்.

உண்மை தான்: கு. ப. ரா. வோடு சிறுகதை செத்து விட்டது என்று சொல்வதும் புதுமைப் பித்தனோடு எல்லாமே மூட்டை கட்டி வைத்தாகி விட்டது என்று முடிப்பதும் வரலாற்று உண்மைக்குப் புறம்பான வேகமான கருத்துக்களே. கால் நூற்றாண்டு கால கட்டத்தில் குறிப்பிட்ட துறையில் சாதித்தவர்கள் பலர் உண்டு. இதிலே விசேஷ சாதனை, அபாரத் திறமை, சராசரிக்கு மேல், சராசரி மட்டம் என்றெல்லாம் வேண்டுமானல் கணிக்கலாம் இதற்காக, பதினாயிரம் எழுத்தாளர்கள் இருப்பதாக ஏற்றுக் கொள்ளச் சொல்வது விசித்திரமே.

'மறு மலர்ச்சி' 'அஸ்திவாரம்' 'கட்டுகோப்பு' 'குணச் சித்திரம்' 'நடைமிதி' போடுதல்' என்ற வார்த்தைகளை கல்கி கட்டுரையாளர் விரும்பவில்லை என்று தெரிகிறது. ஆனால் அவரே விதம் விதமாக, 'மணி மணியாக' 'உயிர் ததும்பி நிற்கும்' 'சரளமான நடையில்' என்ற வழக்கமான, பழகிப்போன சொற்றொடர்களை உபயோகித்திருப்பதைச் சுட்டிக் காட்டத் தோன்றுகிறது.

'ஆங்கிலப் பத்திரிகைகளில் தமிழ் நாட்டு இலக்கியத்தைப் பற்றி எழுத வசதி உள்ள சிலர் என்று குறிப்பிடப் படுகிறது. இதில் வசதி என்ன இருக்கிறது? ஹிந்து பத்திரிகை வாராந்திர அனுபந்தம், சுதேசமித்திரன் வாரத்திற்கு ஒரு நாள் இவற்றைத் தவிர தமிழில் எந்தப் பத்திரிகையில் புத்தக விமர்சனத்துக்கு முழுபக்கம் ஒதுக்குகிறார்கள்? நூலைப் பற்றிய மதிப்புரை முறையான விமர்சனத்துக்கு முதல் படி. தமிழில் வெளிவரும் நூற்றுக்கணக்கான சிறுகதைத் தொகுப்புகளும், நாவல்களும் மதிப்புரையை வேண்டி எங்கே போவது? திடீர் திடீர் என்று 'படித்துப் பாருங்கள்' என்று பக்கம் ஒதுக்கினாலும் அதில் வைத்தியம்' மதம் சம்பந்தமான நூல்கள் இடம் பெறுவதோடு சரி; இதைத் திருத்திக் கொண்டால், இந்த வசதியைத் தமிழ்ப் பத்திரிகைகள் (பிரபல ஏடுகள்) செய்து தந்தால், கருத்து மோதல்களை இங்கேயே வைத்துக் கொள்ளலாமே.

ஆர். ஏ. பத்மனபனின் இன்னொரு கட்டுரையைப் பற்றியும் பிரஸ்தாபம் வந்திருக்கிறது. ஹிந்துவிலேயே சில மாதங்களுக்கு முன்பு வெளியான, கால் நூற்றாண்டு கால சிறுகதை வளர்ச்சியைப் பற்றிய கட்டுரை அது. அதன் குறை, நிறைகள் ஒரு புறம் இருக்க, அதில் சில பிரபல பெயர்கள் விட்டுப் போனதாக, சில வாரங்கள் கழித்து ஹிந்து வின் கடிதங்கள்பகுதியில் பூந்தமல்லி அன்பர் ஒருவர் எழுதி இருந்தார். மாற்றுப் பட்டியல் ஒன்றும் தந்திருந்தார். அதில் மணிவண்ணன் சாண்டில்யன் இரண்டு பெயர்களும் இருந்தன. இருவருமே நாவலாசிரியர்களாகப் பெயர் பெற்றவர்கள், இல்லையோ? முன்னவராவது சில கதைகள் எழுதியிருக்கக்கூடும். பின்னவர்? எப்படியோ, பட்டியல் தருவது தானா முக்கியம்? பட்டியல் மோகம் அகன்று, படைப்பை முன்வைத்து மோதிக் கொண்டாலொழிய இலக்கிய விவாதம் வலுவடையப் போவதில்லை.

ஐந்து கவிதைகள்

சி. மணி

1. கொம்பு

[இளங்காற்று கோதிவிட
வேர்த்து விறுவிறுத்து நடுங்கியதென்று
என்னுள் வேர்விட்ட ஏக்கத்தாலா?]

பொறுக்காமல்
கொடியிடம்
சுற்றிக்கொள் என்றேன்.

[நன்றியோடோ
ஆர்வத்தோடோ}

சுற்றிச்சுற்றி என்னைச் சுற்றிச்சுற்றி
அழுத்தி அணைத்துக்கொண்டதோ இல்லையோ
என் சக்தியெல்லாம் போனதுபோலுணர்ந்
ன்.

நாளாக நாளாக
நெருக்கம் இறுகிஇறுகி
இறுக்கத் தழும்பு ஆழமாகஆக
கேள்வியொன்று ஊர்வதை யுணர்ந்தேன்:

கொம்பு தரப்போனேனா
கொம்பு தேடிப் போனேனா?

2. வெளுத்தது நான்கு

துவைக்க
வெளுத்தது
துணி;

காதலன்

சுவைக்க
வெளுத்தது
இதழ்;

ஞாயிறு

வெறிக்க
வெளுத்தது
நிலம்;

வாழ்வு
நெறிக்க
வெளுத்தது
முடி.

3. தலைவன் கூற்று

உன்கண் பட்டதடி
என் கண்ணில்
பட்டதும் தளிர்த்ததடி
என் உள்
உடன் பட்டதடி
என் வெளி
பட்டு வெளுத்து
இளைத்து இழைத்தடி
பட்டுன் வடிவை
கழிக்க.

4. இரவு

ரக்க ஈந்துவந்து
ரந்து ஈதலேற்று
ணர்ச்சி மகிழ்தல்
ணர்ந்தன்றோ பெயரிட்டார்
ரவுக்கு அப்பெயர்
ன்றால் ஏன் இரவச்சம்?

ஏனிந்த............

ஏனிந்த வாழ்வென்னும்
வளர் குழப்பம்
முக மயிராய்
கவலை யின்றி
கூட்டு வட்டிக்
கடனாய் வளர்குழப்பம்?

ஒரு பெரிய வாய்ப்பு

அன்புள்ள வாசகர்களே,

சென்ற ஏட்டில் வெளியான எழுத்து பிரசுரம் வெளியிட்டுள்ள 9 புத்தகங்கள் விளம்பரத்தை கவனித்திருப்பீர்கள். மறுபடியும் உங்கள் கவனத்துக்கு அவைகளை கொண்டு வருகிறோம்.

வ. ரா., ந. பிச்சமூர்த்தி, கு. ப. ரா., சிட்டி, வல்லிக்கண்ணன், சி. சு. செல்லப்பா ஆகியோரின் புத்தகங்களை ஒன்று சேர்த்து ஒரே சமயத்தில் பார்க்கிற வாய்ப்பு இப்போதுதான் தமிழ் புத்தக உலகத்தில் முதல் முறையாக கிடைக்கிறது என்று ஒரு இலக்கிய அன்பர் குறிப்பிட்டார்.

உள்ளடக்கம், உருவம் இரண்டும் இழைய இவ்வளவு சிறப்பாக புத்தகங்கள் வெளியானது ஒரு பெரிய சாதனை என்று மற்றொருவர் குறிப்பிட்டார்.

ஏதோ மாடர்ன் லைப்ரரி (பிரபல இங்கிலிஷ் பிரசுரக் கம்பெனி) மாதிரி இருக்கிறதே என்றார் இன்னொருவர்.

மேல் நாட்டு பதிப்புடன் போட்டி போடுகிறதே என்றார் வேறொருவர்.

இதெல்லாம் புத்தகம் வாங்கியவர்களிடமிருந்து வந்த வார்த்தைகள்.

ஆகவே எழுத்து வாசகர்கள் ஒவ்வொருவரையும் கேட்டுக் கொள்கிறோம்.

ஒரு செட் இந்த 9 புத்தகங்களையும் வாங்கி இலக்கியத்தரமான உங்கள் புத்தகங்களின் வரிசையில் சேர்த்துக் கொள்ளவும். உங்கள் கைகளுக்கு திரும்பத் திரும்ப வர வேண்டிய நூல்கள் இவை.

நல்ல சலுகை

பின் வரும் 9 புத்தகங்களும் ரூ 31.00 பெறுமான முள்ளவை, ஆனால்—

நீங்கள் ரூ. 25 மட்டும் அனுப்பிவைக்கவும்

தபால் செலவு எங்களது.

வி. பி. பி, மணியாடர் மூலம் பெறலாம்: வெளியூர் செக்குகள் மாற்று கமிஷன் சேர்த்து அனுப்பப்பட வேண்டும்.

1. சொர்க்கத்தில் சம்பாஷணை (வ. ரா) ரூ. 3·00
2. வசந்தகாலம் ,, ரூ. 3·00
3. பதினெட்டாம் பெருக்கு (ந. பிச்சமூர்த்தி) ரூ. 4·00
4. வழித்துணை ,, ரூ. 2·00
5. அகல்யை கு. ப. ரா. ரூ. 4·00
6. ஆண் சிங்கம் (வல்லிக்கண்ணன்) ரூ. 4·00
7. சில விஷயங்கள் (சிட்டி) ரூ. 3·00
8. சத்யாக்ரகி (சி. சு செல்லப்பா) ரூ. 4·00
9. மணல் வீடு ரூ. 4.00

நீங்கள் அனுப்பவேண்டியது ரூ. 25 தான்

★

எழுத்து பிரசுரம்

19-A, பிள்ளையார் கோவில் தெரு,
சென்னை-5.

EZHUTTHU Edited and Published by C. S. Chellappa, from 19-A, Pilliar Koil Street, Madras-5.
Printed by M. Ramanatha Rao for Cenrtal Press. 97. Big Street, Triplicane Madras-5.